DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 798 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 1 |
| Name | திரு. சுந்தரராஜ் |
| Father Name | சிவபெருமாள் |
| Village | கீழநாட்டார்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 35 |

**(எதிரி ஆஜர் . எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 12-05-2025.(நேரம்: 12.36PM )**

**முதல்விசாரணை**

1.நான் தற்போது கீழநாட்டார்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலிவேலை செய்து வருகிறேன்.
3. என்னிடம் காட்டப்படும் பார்வைமகஜரில் உள்ள சுந்தரராஜ் என்ற கையெழுத்து என்னுடையது இல்லை.
4. இந்த வழக்கு சம்மந்தமாக எனக்கு எதுவும் தெரியாது.
5. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
6. சாட்சி மணி என்பவரையும் எனக்கு தெரியாது.

(அ.சா 1 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது . அ.சா 1ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 22.12.2021 ஆம் தேதி இரவு 08.00 மணியளவில் நானும், சாட்சி மணி என்பவரும் திருநெல்வேலி டு திருச்செந்தூர்மெயின் ரோட்டில் கருங்குளம் பெட்ரோல் பல்க்கிற்கு மேற்கே ரோட்டிற்கு வலப்புறமாக உள்ள இடத்தில் நின்றுக்கொண்டிருக்கும்போது செய்துங்கநல்லூர் போலிசார் எங்கள் முன்னிலையில் வழக்கு சம்பவ இடத்தையும் அதன் சுற்றுபுறத்தையும் பார்வையிட்டு பார்வைமகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தார்கள் என்றும் அதில் சாட்சிகளாக நாங்கள் கையெழுத்து செய்தோம் என்று போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி உறவினர் என்பதால் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC.798 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 2 |
| Name | திரு. பால்ராஜ் |
| Father Name | அழகபுரத்தான் |
| Village | நாட்டார்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 65 |

**(எதிரி ஆஜர் எதிரி தரப்பில் வழக்கறிஞர்கள் ஆஜர்) )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 12-05-2025.(நேரம்: 03.31 PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது நாட்டார்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் கூலி வேலை செய்து வருகிறேன்.
3. இவ்வழக்கின் சாட்சி வேல்சாமி என்பவரை எனக்கு தெரியும்.
4. இவ்வழக்கின் சாட்சிகள் கொம்பையா மற்றும் மாரியம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியும்.
5. இவ்வழக்கின் ஆஜர் எதிரியையும் எனக்கு தெரியும்.
6.என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள பால்ராஜ் என்ற கையெழுத்து என்னுடையது தான் . **அந்த ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள பால்ராஜ் என்ற கையெழுத்து மட்டும் முறையே அசாஆ 2,3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**
7.கடந்த 1 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் போலிஸ் ஸ்டேசனில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து போட்டுக்கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

8.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.
(அ.சா 2 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது. அ.சா 2ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 24.12.2021 ஆம் தேதி 08.30 மணிக்கு நானும், சாட்சி வேல்சாமி என்பவரும் எங்களது சொந்த வேலைக்காக சென்னல்குடிக்கு சென்று அங்குள்ள பஸ்ஸ்டாப் அருகே நின்றுக்கொண்டிருந்த போது செய்துங்கநல்லூர் காவல் உதவி ஆய்வாளரை கண்டதும் இவ்வழக்கின் எதிரி ஜெயபால் தப்பி ஓட முயன்றவரை மடக்கி பிடித்து விசாரித்தப்போது எதிரி ஜெயபால் எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல. அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.15 மணிக்கு எதிரி ஜெயபாலன் கருங்குளம் பெட்ரோல் பல்க்கிற்கு மேற்கே ரோட்டில் வலப்புறம் பக்கத்தில் உள்ள வாழை தோட்டத்திலிருந்து சுகுனா ஜெட் மோட்டார் ஒன்று எங்கள் முன்னிலையில் செய்துங்கநல்லூர் உதவி ஆய்வாளரல் அவர்களால் கைப்பற்றப்பட்டு அத்தாட்சி பிறப்பிவிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்துக்கள் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல . மேற்கண்ட விவரத்தை மேற்கூறியவாறு போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி ஒரே ஊர்காரர் என்பதாலும் உறவினர் என்பதாலும் உண்மையை மறைத்துபொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.

DEPOSITION OF WITNESSES

(Chapter XXII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, No.2 SRIVAIKUNDAM

| | |
|---|---|
| Case No | CC. 798 / 2022 |
| Depostition of witness for | Prosecution wit. PW. 3 |
| Name | திரு. வேல்சாமி |
| Father Name | ராசையா |
| Village | நாட்டார்குளம் |
| Taluk | |
| caste | |
| calling | |
| Religion | |
| Age | 40 |

**(எதிரி ஆஜர் )**

**Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 the 12-05-2025.(நேரம்: 03.45PM )**

**முதல்விசாரணை**

1. நான் தற்போது நாட்டார்குளத்தில் குடியிருந்து வருகிறேன்.
2. நான் விவசாயம் வேலை செய்து வருகிறேன்.
3. இவ்வழக்கின் அசா 2 ஐ எனக்கு தெரியும்.
4. இவ்வழக்கின் சாட்சிகள் கொம்பையா மற்றும் மாரியம்மாள் ஆகியோர்களை எனக்கு தெரியாது.
5. இவ்வழக்கின் ஆஜர் எதிரியை எனக்கு தெரியும்.

6.என்னிடம் காட்டப்படும் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள வேல்சாமி என்ற கையெழுத்து ்என்னுடையது இல்லை மற்றும் அத்தாட்சியில் உள்ள வேல்சாமி என்ற கையெழுத்து என்னுடையது **தான்.அந்த அத்தாட்சியில் உள்ள வேல்சாமி என்ற கையெழுத்து மட்டும் முறையே அசாஆ 4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. சுமார் 2 ஆண்டுகளுக்கு முன்பாக ஒருநாள் போலிஸ் ஸ்டேசனில் வைத்து போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையெழுத்து

போட்டுக்கொடுத்தேன். வழக்கு சம்மந்தமாக வேறு எதுவும் எனக்கு தெரியாது.

8.போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அ.சா 3 சாட்சியானவர் அரசு தரப்பு வழக்கிற்கு எதிராக சாட்சியம் அளிப்பதால் அவரை பிறழ் சாட்சியாக பாவிக்க கோரி வாய்மொழி விண்ணப்பம் அரசு தரப்பில் செய்யப்பட்டது . அ.சா 3ன் சாட்சியை பரிசிலனை செய்ததில் அவர் அரசு தரப்புக்கு விரோதமாக சாட்சியம் அளித்ததாக அறிய முடிவதால் அவரை பிறழ் சாட்சியாக இந்த நீதிமன்றம் அறிவித்து குறுக்கு விசாரணை செய்ய அரசு தரப்புக்கு அனுமதி அளிக்கப்படுகிறது.)

**அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

கடந்த 24.12.2021 ஆம் தேதி 08.30 மணிக்கு நானும், அசா 2 என்பவரும் எங்களது சொந்த வேலைக்காக சென்னல்குடிக்கு சென்று அங்குள்ள பஸ்ஸ்டாப் அருகே நின்றுக்கொண்டிருந்த போது செய்துங்கநல்லூர் காவல் உதவி ஆய்வாளரை கண்டதும் இவ்வழக்கின் எதிரி ஜெயபால் தப்பி ஓட முயன்றவரை மடக்கி பிடித்து விசாரித்தப்போது எதிரி ஜெயபால் எங்கள் முன்னிலையில் தாமாக முன்வந்து ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார் என்றும் அதில் நாங்கள் சாட்சிகளாக கையொப்பம் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல . அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 12.15 மணிக்கு எதிரி ஜெயபாலன் கருங்குளம் பெட்ரோல் பல்க்கிற்கு மேற்கே ரோட்டில் வலப்புறம் பக்கத்தில் உள்ள வாழை தோட்டத்திலிருந்து சுகுனா ஜெட் மோட்டார் ஒன்று எங்கள் முன்னிலையில் செய்துங்கநல்லூர் உதவி ஆய்வாளரல் அவர்களால் கைப்பற்றப்பட்டு அத்தாட்சி பிறப்பிவிக்கப்பட்டது என்று சொன்னால் சரியல்ல. மேற்படி அத்தாட்சியில் நாங்கள் சாட்சிகளாக கையெழுத்துக்கள் செய்தோம் என்று சொன்னால் சரியல்ல . மேற்கண்ட விவரத்தை மேற்கூறியவாறு போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது எதிரி ஒரே ஊர்காரர் என்பதாலும் உறவினர் என்பதாலும் உண்மையை மறைத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

சாட்சியின் வாக்குமூலம் திறந்த நீதிமன்றத்தில்சாட்சி சொல்ல, சொல்ல என்னால் தட்டச்சருக்குசொல்லப்பட்டு, அவரால் கனிணியில் பதிவு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்து காண்பிக்கப்பட்டு ஒப்புக்கொண்டு கையெழுத்து பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர் எண். 2
ஸ்ரீவைகுண்டம்.